## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**ST.C.No.1187/2022**

**P.W. 1**

சுதாகர் (எ) பாலமுருகன் த/பெ. சுகுமார்      நாள் 01.07.2025

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் என்னால் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு, குற்ற முறையீடு, முதல் விசாரணை ஆணையுறுதி ஆவணம்  ஆகியவற்றில் சொல்லப்பட்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

வழக்கு காசோலையை தவிர எனக்கும், எதிரிக்கும் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல் , வரவு செலவு இதற்கு முன்னதாகவோ, இதற்கு பிறகோ ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

நான் என்ன தொழில் செய்கிறேன் எ்னறால் உரிமம் வைத்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன்.  அதற்கு சூரிய அசோசியன்ஸ் என்று பெயர் வைத்துள்ளேன்.  மேற்படி நிறுவனம் முகவரி எங்கு உள்ளது என்றால் 52/3, மன்னார்குடி ஆசாத்தெருவில் இயங்குகிறது.

நான் வசிக்கும் இடம் கட்டக்குடி.  இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை நகலில் எந்த முகவரி உள்ளது என்றால்  கட்டக்குடி முகவரியில் தான் உள்ளது.  நானும், எதிரியும் நீண்டகால நண்பர்கள் என மனுவில் குறிப்பிட்டு இருக்கிறேன்  அது எந்த வகையில் என்றால் எதிரியின் அக்கா கணவரும் நானும், நண்பர் என்பதால்.  மேற்படி விபரத்தை வழக்கில் எங்காவது குறிப்பிட்டு இருக்கிறேனா என்றால் இல்லை.

நான் தனியார் வங்கி நிறுவனத்தில் ஆவணங்களை பார்டிக்காக வாங்கி கொடுத்து எனது நிறுவனத்தின் மூலம் கடன் வாங்கி கொடுப்பேனா என்றால் வங்கி நிறுவனத்தில் பரிந்துரை சொல்லி விடுவேன்.

இந்த கடன் வட்டிக்கு கொடுக்கப்பட்டதா என்றால் ஒரு காசு வட்டிக்கு தான் கொடுக்கப்பட்டது.  நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை  எவ்வளவு என்றால் ரூ.1,37,000/- ஆகும்.  மேற்படி கடனை எங்கு வைத்து எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 05.02.2022 ம் தேதி எனது வீட்டில் வைத்து கொடுத்தேன்.  தொகையை ரொக்கமாக கொடுத்தேன். அப்போது எனது வீட்டில் யாரும் இருந்தார்களா என்றால் எனது நண்பர் மகேஷ் இருந்தார். அவருக்கு நான் பணம் கொடுத்த விபரம் தெரியும்.

நான் தொகை கொடுத்தபோது கடனுறுதி சீட்டு நான் எழுதி வாங்ககொண்டேன்.  அந்த கடனுறுதி சீட்டு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதா என்றால் பூர்த்தி செய்யப்பட்டது.  அந்த கடனுறுதி சீட்டில் யார் சாட்சிகள் என்றால் எனது நண்பர் மகேஷ் மற்றும் எதிரி அழைத்து வந்த நபர் மற்றொரு நபர் கையெழுத்து செய்தார்.  மற்றொரு நபர் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது.

எதிரி கடனுறுதி சீட்டுக்கு இடைப்பட்ட காலத்தில் வட்டி தொகை கொடுத்தாரா என்றால் ரூ.20,900/- நான்கு தவணைகளில் கொடுத்தார். அது வட்டியா? அசலா? என்றால் வட்டியில் பாதியும், அசலில் பாதியும் வரவு வைப்பதாக சொன்னார். நான் கடன் கொடுத்த தேதியில் இருந்து எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் இடைப்பட்ட காலத்தில மேற்படி தொகை எனக்கு எதிரி கொடுத்தார். தொகை எந்த வகையில் செலுத்தினார் என்றால் Gpay மூலம் செலுத்தினார்.

வழக்கு காசோலை எங்கு வைத்து என்று கொடுத்தார் என்றால் ஆசாத் தெருவில் உள்ள எனது அலுவலகத்தில் வைத்து என்னிடம் 28.09.2022 ம் தேதி கொடுத்தார். அந்த விபரம் யாருக்காவது தெரியுமா என்றால் எனது நண்பர் மட்டும் தெரியும். காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் எதிரி ஒரு ஆளை அழைத்து வந்தார். அவர் பூர்த்தி செய்து கொடுத்தார். அந்த நிகழ்வு என் முன்னிலையில் தான் நடந்தது.

காசோலை கொடுத்ததில் இருந்து இரண்டு நாட்கள் கழித்து காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். காசோலையை நிர்ணயம் செய்தது யார் என்றால் நான் தான் தொகையை நிர்ணயம் செய்தேன். என்னிடம் ஏற்கெனவே கொடுத்த ரூ.20,900/-ல் அன்றையதினம் ரூ.10,000/- த்தை எதிரி வாங்கி கொண்டார். மேற்படி விபரத்தை நான் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

எனது சட்டமுறை அறிவிப்பு அசா.ஆ.3 ல் எதிரி காசோலை கொடுக்கும்போது அன்றையதினமே வட்டித்தொகையை மொத்தமாக கணக்கீடு செய்து அதை ரொக்கமா கொடுத்துவிட்டு அசலுக்கு காசோலை கொடுத்தார் என்று நான் எதுவும் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு நான் எதுவும் சொல்லவில்லை.

எதிரி காசோலை கொடுத்தவுடன் பணம் ஆன பிறகு புரோநோட்டை தருகிறேன் என்று அவரிடம் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. அதுபோல் நிகழ்வை நடைபெறவில்லை என்பதால் நான் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எனது வழக்கறிஞர் அறிவிப்பில் நான் கட்டக்குடியில் வைத்து பணத்தை கொடுத்ததையும், எனது கடையில் வைத்து எதிரி காசோலை கொடுத்த விபரத்தையும் குறிப்பிட்டு சொலலியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

நான் என்னுடைய புகாரில் 2 வது பாராவில் நான் கொடுத்த கைமாற்று கடன் தொகையை திரும்ப கேட்டதற்கு எதிரி காசோலை கொடுத்தார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. அதைபோல் எதிரி எவ்விதபணமோ, வட்டியோ கொடுக்காமல் இழுத்தடித்து வந்தார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. காரணம் இடைப்பட்ட நாளில் தொகை கொடுத்து வந்தார்.

எதிரி தரப்பில் இருந்து பதில் அறிவிப்பு வந்தது. அதை நான் 4 வது ஆவணமாக குறியீடு செய்து இருக்கிறேன். அந்த பதில் அறிவிப்பில் நான் வங்கியில் கடன் பெற்றும் முகவராக செயல்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விபரத்தை எனது புகார் மனுவில் மறுத்திருக்கிறேனா என்றால் மறுத்திருக்கிறேன்.

என்னுடைய செல்போன் நம்பர் எண் என்றால் 9442170144. மேற்படி எண் தான் எனக்கு phone pay எண் மற்றும் எனது நிறுவனத்தின் தொடர்பு எண் என்றால் சரிதான். சூரி ஆசோசியட் நிறுவனத்தை நடத்தி வருவதாக பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விபரத்தை என்னுடைய புகார் மனுவில் மறுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு வந்த பதில் அறிவிப்பில் நான் வாடிக்கையாளர்களை மூளை சலவை செய்வதாக எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னுடைய புகார் மனுவில் 5 வது பாராவில் நான் வாடிக்கையாளர்களுக்கு கடன் பெற்றுதருவதாக சொல்லி மூளை சலவை செய்வதாக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்து இருக்கிறேன் என்றால் சரிதான். நான் உண்மையில் அவ்வாறு செயல்படுவதால் தான் என் மனதில் உள்ள வார்த்தை புகார் மனுவில் வெளிப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

நான் என்னுடைய செல்போன் whatapp ல் வைத்திருக்கும் படம் எனது குழந்தை தெய்வமான அய்யனார் படம் என்றால் சரிதான். எதிரியின் நம்பர் எண் என்ன என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த நீதிமன்றத்தில் நான் காசோலை மோசடி வழக்குகளில் புகார்தாரராக 3,4 வழக்குகளில் புகார்தாரராக உள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்குகளில் எதிரியாக வரும் நபர்கள் அனைவருமே என்னிடம் லோன் வாங்கி கொடுக்க சொல்லி அந்த நடைமுறைக்காக காசோலை கொடுத்த நபர்கள் தான் என்றால் சரியல்ல.

நான் 17.08.2022 ம் தேதி எனது நிறுவனத்தின் பெயரில் எதிரியுடன் ஒரு ஒப்பந்த பத்திரம் வாங்கி கொண்டு அதன் நகலை அவருக்கு வழங்கினேன் என்றால் சரியல்ல. எதிரி தங்களிடம் சவளக்காரனில் உள்ள அவரது இடத்திற்கு லோன் வாங்கி கொடுக்க அனுகினார் என்றும், நிதி நிறுவனத்திடம் அத்தாட்சி வழங்க வேண்டும் என்று கூறி கையொப்பம் மட்டும் செய்த பூர்த்தி செய்யாத இரண்டு காசோலைகளை நான் பெற்றுக்கொண்டேன் என்றும், அதில் ஒன்றை மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், மற்றொரு காசோலையான 022811 காசோலை என் வசம் உள்ளது என்றும், நான் எதிரிக்கு கடன் பெற எந்தவித முயற்சி செய்யாமல் கமிஷன் தொகையாக ரூ.50,000/- பெற்றுகொண்டும், மேலும் ரூ.55,000/- கமிஷன் வேண்டும் என கேட்டு எதிரி மறுத்துள்ளதால் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து வழக்கு போடுவேன் என்று மிரட்டிய காரணத்தால் எதிரி இரண்டு காசோலைகளையும் நிறுத்தம் செய்ய கோரி வங்கியில் 22.09.2022 ம் தேதியன்றே கடிதம் கொடுத்து விட்டார் என்றும், தாங்கள் செய்யாத வேலைக்காக தொகை கேட்டு நிதி நிறுவனத்தில் கொடுப்பதாக பெற்ற காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

கடந்த 01.10.2022 ம் தேதியன்று என்னுடைய செல்போனில் இருந்து எதிரியை தொடர்பு கொண்டு நான் கடன் தொகையை பெற எந்தவித முயற்சி செய்யவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளேன் அந்த பதிவுகள் எதிரிகள் வசம் உள்ளது என்றால் சரிதான். அது அந்த 01.10.2022 ம் தேதிதானா என்பது ஞாபகம் இல்லை.

அதைபோல 01.10.2022 ம் தேதியன்று எதிரியை நான் செல்போனில் தொடர்பு கொண்டு நீ காசோலை கொடுத்து இருக்கிறாய். அதில் ரூ.1,50,000/- பூர்த்தி செய்து கலெக்கசனுக்கு போடுவேன் அல்லது உனது மாமானாரிடம் பணத்தை வாங்குவேன் என்று நான் பேசிய தரவுகள் எதிரி வசம் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

இந்நீதிமன்ற பரிந்துரையின் படி மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் ராஜேந்திரன் த/பெ.தெட்சிணாமூர்த்தி என்பவர் தனது பத்திரத்தை வாங்கி கொண்டு தொகையை பெற்றுக்கொண்டு வங்கியில் கடன் பெற்று தருவதாக சொல்லி தன்னை மோசடி செய்து விட்டதாக கொடுத்த பேரில் நிலைய குற்ற எண்.206/2024 சட்டபிரிவுகள் 294(பி), 406, 420, 323,506(2)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நான் ஜாமீனில் வெளிவந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு பொய் வழக்கு. பத்திரமே கிடையாது.

நான் சூரிய அசோசியேட் என்ற பெயரில் கடன் வாங்கி தருவதாக ஆசை வார்த்தை கூறி ஆவணம் மற்றும் காசோலையை பெற்றுக்கொண்டு நான் கேட்கும் தொகையை கொடுக்காத பட்சத்தில் அவர்கள் கொடுத்த பூர்த்தி செய்யாத காசோலையை பயன்படுத்தி வழக்கு போடும் பழக்கம் உ்ளளவர் என்றும், அந்த வகையில் எதிரியிடம் காசோலை மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொண்டு தொகை கேட்டு அவரது காசோலையை மோசடியாக பயன்படுத்தி பொய் வழக்கு போட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் பொய் வழக்கு போட்டுள்ளதால் தான் வழக்கு காசோலை தொகை கைமாற்றுகடனா? வட்டிக்கு கொடுக்கப்பட்டதா? என்பது குறித்தும் காசோலை வழங்கியது தொகை கொடுத்தது குறித்து பற்றி முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் என்னுடைய வழக்கு ஆவணங்களில் எதிரிக்கு 12% வட்டிக்கு கொடுத்தாக சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

எதிரி எந்த சூழ்நிலையிலும் என்னிடம் கடன் பெறவில்லை என்றும், அவர் எனக்கு எந்த வகையிலும் நண்பர் இல்லை என்றும், எதிரியிடம இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய் வழக்கு என்பதால் தான் என்னுடைய இருப்பிட முகவரியை மறைத்து வழக்கு ஆவணங்களில் கிராமத்து முகவரியை குறிப்பிட்டு சொலலியுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/---J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.